புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கரும்பு கவிதைத்தொகுப்பில் அற உணர்வு

**ஆய்வாளர்**
ப.இளம்பரிதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி
காரைக்குடி.

**நெறியாளர்**
முனைவர் அ.பாரதிராணி
ஆய்வு நெறியாளர்
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி
காரைக்குடி.

ஆய்வுச் சுருக்கம்

ஒரு குறிப்பிட்ட மக்கள் ஒன்றிணைந்து வாழும் குழுவாகும் இச்சமூகத்தின் அமைப்பு முறை, வாழ்வியல் முறை, நடத்தைகள் ஆகியவற்றை பற்றி அறியப்படும் துறையாக சமுகவியல் துறை விளங்குகிறது. தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து நகரத்தை அமைத்து செல்வ செழிப்புடன் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தங்கள் நிலத்திற்கு ஏற்றவாறு தொழில்களை செய்து சிறப்புடன் விளங்கினர். மக்கள் இறைவானாக இயற்கையை வணங்கினர். இதனை சிலப்பதிகார காப்பியத்தில் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றதும்" என இளங்கோவடிகள் எடுத்துக்காட்டியுள்ளார். மக்கள் இன்பமாக வாழ அறஉணர்வு மிகவும் இன்றியமையாதது அவற்றை மையமாகக் கொண்டு தமிழக மக்கள் கடைபிடித்த நல்வழிகளான கல்வி, முயற்சி, ஒழுக்கம், நட்பு, பொறுமை, ஆணவத்தின் தீங்கு ஆகியவற்றை கண்டறிந்து உலக மக்களை பின்பற்ற செய்வதே கரும்பு கவிதைத் தொகுப்பின் நோக்கமாகும்.

**முன்னுரை**

இவ்வுலகில் வாழும் மக்கள் பலர் பல்வேறு இடங்களில் வாழ்ந்துவருகின்றனர். அவ்விடத்தில் இருக்கும் தட்பவெப்பநிலைக்கு ஏற்ப உணவுமுறைகள், ஆடைகள் இருப்பிடங்கள் ஆகியவற்றை தோற்றுவித்து வாழ்கின்றனர். மக்களின் மொழிகள், உடலமைப்பு, நடத்தைகள் வேறுபட்டு இருக்கின்றன. இருப்பினும் ஓர் சமூகமாக உருவாகி தங்களுக்கு என்று சில கட்டுபாடுகளை விதித்து அதன் வழி பின்பற்றுகின்றனர். தமிழக சமகத்தில் ஆண்களும், பெண்களும் அற உணர்வுடன் வாழ்ந்து வந்துள்ளனர். அவற்றை பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அரசியல்**

சங்க கால மன்னர்கள் தன் நாட்டு மக்களை பேணி பாதுகாத்து மகிழ்வுடன் வைத்திருந்தனர். மன்னர் தன் நாட்டினை சிறப்புற நடத்த பல ஆலோசனைக்கு குழுக்கள், மற்றும் ஒற்றர்களை கொண்டிருந்தான். நாட்டு மக்களின் அனைத்து இன்ப துன்பத்திலும் பங்கு கொண்டார் தான் ஆட்சி காலத்தில் நீதி தவறாமல் நடுநிலையுடன் செங்கோல் வீழாது சிறப்புடன் விளங்கினான். சான்றோர் மற்றம் இலக்கியம் கூறிய அறத்துடன் வாழ்ந்து உலகம் போற்ற ஆட்சி நடத்தினான், இதனை முல்லைவாணன் ,

**"துணிவு வேண்டும் தம்பி! அது**

**தொல்லை களைப் போக்கும்,**

**பணிவு வேண்டும் தம்பி! அது**

**பகையி லிருந்து காக்கும்**

**நேசம் கொண்டு வாழ்தல் – உயிர்**

**வாழ்க்கைக்கு அது விருந்து"**

துணிவு இருந்தால் வாழ்வில் இன்னல்களைத் தவிர்த்து வாழவும் நேசத்துடன் வாழ்ந்தால் வாழ்வில் பகைமை வளராது இனிய வாழ்க்கை வாழ முடியும் எனக் வர்ணித்துள்ளார்.

இவற்றை சிறுபாண்ணாற்றுப்படையில்

**"செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்**

**இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்**

***அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,***

***ஆண்அணி புகுதலும் அழிபடை தாங்கலும்***

***கருதியது முடிந்தலும் காமுறப் படுதலும்***

***ஒருவழிப் படாமையும் ஒடியது உணர்தலும்***

***வரிசை அறிதலும் வரையாபது கொடுத்தலும்"[1]***

*(சிறுபாண் – 207-217)*

*மன்னர் அரசியல் வாழ்வில் சிறந்து விளங்குவது குறித்து சங்க இலக்கய நூலான சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.*

**விருந்தோம்பல்**

*சங்க மக்களின் மிகப்பெரிய அறமாக போற்றப்பட்டது விருந்தோம்பலாகும். தன்னை நாடிவரும் நபருக்கு முதலில் விருந்து அளித்து அன்புடன் பழகுவர். இவை பண்பாட்டில் உயர்ந்த இடத்தை பெற்றிருந்தது. இவை உடல் மற்றும் அல்லாமல் மனிதன் ஏற்படும் தீய எண்ணங்களை அழிக்கும் அறுமருந்ததாக விளங்கியது. இதனை முல்லைவாணன்*

***"விருந்தை மருந்தெனக் கொண்டார் கொள்கை***

***விலாவும் உடையவே தமிழ்ப்பண்பு விண்டார்"***

*தமிழர் விருந்தோம்பல் உபசரிப்பு செய்வதுமட்டுமின்றி தனது கொள்கையை கைவிடாமல் உறுதியார் வாழ்ந்து வந்தனர் என விளங்கியுள்ளார், இதனை திருவள்ளுவர்*

***"இருந்தோம்பி இல்வார்வ தெல்லாம் விருந்தோம்பி***

***வேளாண்மை செய்தற்பொருட்டு"[2] (18)***

*இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரை உபசரிப்பதே சிறப்பு என விளக்கியுள்ளார்.*

**கல்வி**

*கல்வி அறிவை வளர்த்து, தனிமனித நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இவை சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் துணையாக இருக்கிறது. கல்வியை ஆயுதமாக கொண்டு எந்த துன்ப சூழலிலும் தன்னை பாதுகாத்து கொள்ள இயலும், எந்த ஒர நபராலும் களவு செய்ய இயலா செல்வம் கல்வியாகும். இதனை*

***ஆதலால் ஏட்டுக் கல்வியுடன் – உலகியல்***

***அறிவுச் சுனையில் நீராடல்***

**தீதிலா வாழ்க்கையைக் காட்டிவிடும்! பணிகள்**

**திருந்தமே செல்வத்தைக் கூட்டிவிடும்!**

*ஏட்டுக்கல்வியை கற்பதன் வாயிலாக தீயவை அழிந்து செல்வம் பெருகி வாழ்க்கை இனிதாகும் என முல்லைவாணன் அனுபத்தின் வாயிலாகக் கூறுகிறார். இவற்றை புறநானூற்று பாடலில்*

**"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"**[3] *(புறம் – 183)*

*கற்ற ஒருவனுக்கே அரசரும் சிறந்த பதவியை வழங்குவார் என இப்பாடலின் வழி அறிய முடிகிறது.*

**வீரம்**

*தமிழக நிலப்பகுதியை ஆண்டு மூவேந்தர் மன்னர் முதல் குறுநில மன்னர் வரை மிகவும் வீரத்துடன் சிறந்து விளங்கினர். தங்களது போர் திறனால் பகைவர் நாட்டு எதிரிகளை தோற்கடித்தனர். பாண்டியன் வீரம் அறிந்த சில பகை மன்னர்கள் அச்சம் கொண்டு திறைசெலுத்த வரிசையில் நின்றதாக இலக்கியம் வெளிப்படுத்துகிறது. இதனை போன்ற வீரத்துடன் இருத்தல் நன்று, என்பதை*

**கட்டொழுங்கு போர்ப் பயிற்சி**

**நாட்டினைக் காக்கும்! மணிச்**

**சிட்டெனவே அறப்பணிசெய்**

**செம்புகழ் சேர்க்கும்!**

*நாட்டிற்கு உழைத்தால் மனிதனின் புகழ் என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் என தமிழறிஞர் விளக்குகிறார். தமிழரின் வீரத்தைப் பற்றி பாரதியார்*

**"வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர்**

**வீரம் செறிந்த தமிழ்நாடு"**[4]

*தமிழகம் வீரத்துடன் சிறந்து விளங்கியதை பாரதியார் தன் பாடல் வழியாக எடுத்துரைத்துள்ளார்.*

**இறையன்பு**

*உலகில் தோன்றிய அனைத்து உயிர்களம் ஓர்நாள் இறப்பினை சந்திக்கும். அந்நாள் இவ்வுலகில் இருக்கும்வரை இறைவன் மீது அன்பு செலுத்தல் வேண்டும். நம்முடைய மன்னர் முதல் புலவர் வரை இறைவனுக்கு தொண்டுகள் செய்துள்ளனர். இறைவனுக்காக தமிழில் பல பாடல்கள் இயற்றி பாமர மக்களையும் வழிபடச் செய்தன. அத்தகைய மாற்றத்தால் வாழ்வில் துன்பம் விலக்கும் என்பதை தமிழறிஞர்,*

***கண்மைச் செயலில் களிக்கும் மனத்தைக்***
***கலைக்கும் இறையன்பு!***
***உண்மை ஒளியில் நாமே இருந்தால்***
***அணைக்கும் அவ்வன்பு!***

*இறைவன்மீது பக்தி கொண்டிருந்தால் வாழ்வில் அன்பும் அமைதியும் பெருகும் என இப்பாடல் வழி விளக்கியுள்ளார்.*

*இதனை திருவாசகத்தில்*

***கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்***
***நிற்பானைப் போல என் நெஞ்சினுள்ளே புகுந்தருளி***
***நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்***
***சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ"[5] (318)***

*அனைத்துவித நல்ல எண்ணங்களையும் பெறச்செய்து வாழ்வில் உயர வழிகாட்டுவான் என சிவசங்கரன் எடுத்துரைத்துள்ளார்.*

### பொதுநலன்

*ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இன்றிய தன்னலமிகுதியும், பொதநல உணர்வு இன்மையுமே ஆகும். மக்கள் பலர் தன்னிடம் இருக்கும் பொருளை பிறருக்கு பகிர்ந்து கொடுத்தலும், தீயவைக்கும் அஞ்சுதலும் புகழ் என்றால் உயிரை கொடுத்தலும் தமிழரின் பண்பாகும். இத்தகைய பண்பினை விளக்கும் வகையில் தமிழறிஞர்*

***பொதுப்பணியில் மக்கள் நலம்***
***பூரிக்கும் காண்பாய்! அந்தப்***
***புதுப்பணியே உனக்கு வெற்றி***
***மாலையும் பூணபாய்!***

*மக்கள் தன்னலமின்றி பொதுநலத்துடன் வாழ்ந்தால் வாழ்வில் புதிய இன்பம் உண்டாகும், சுற்றமும் நட்பும் வாழ்க்கையை இனிமையாக்கும் என சிறப்பித்துள்ளார்.*

*இதனை புறநானூற்று பாடலில்,*

***உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்***

***அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்***

***தமியர் உண்டலும் இலரே***

... ... ... ... ... ... ...

***தமக்கு என முயலா நோன்தாள்***

***பிறர்க்கு என முயலுந ருண்மையானே!"*** *(புறம் – 182)*

*தனக்கு கிடைக்கும் அமிழ்தம் பிறருக்கும் கிடைக்க வேண்டும் என்ற பொதுநலத்தை எடுத்துக்காட்டுகிறார்.*

### முடிவுரை

*மனித சமூகம் இவ்வுலகில் காணப்படும். அஃறிணை உயிர்களிடம் இருந்து வேறுப்பட்ட இனமாகும். முதன்மையாக இருப்பது அவனிடம் காணப்படும் நடத்தைகள் ஆகும். அவை மானிட வாழ்வில் இன்பம் மட்டும் இன்றி வாழ்வில் உயர்ந்து விளங்க வழிவகுக்கிறது. அதனை தமிழர் வாழ்வில் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.*

### தொகுப்புரை

- *தமிழர் பண்பாட்டில் அறம் இன்றியமையாததை அறிய முடிகிறது.*
- *அரசியலில் மன்னன் குடிமக்களை காக்க வீரத்தையும், ஒழுக்கத்தையும், அரணாக கொண்டிருந்தான்.*
- *நாட்டில் செல்வம் அதிகம் இருப்பினும் கல்வியின் சிறப்பை உணர்ந்து, இலக்கியங்கள் தோன்ற வழிவகை செய்து அவனை சிறப்புச்செய்தான்.*
- *வாழ்வு நிலையில்லாது என அறிந்து இறைவனை வணங்கினான்.*
- *தான் பெற்ற செல்வம் பிறருக்கு பயன்படும் வகையில் பொதுநலச் சிந்தனையுடன் வார்ந்தான் என்பதை இக்கட்டுரையில் அறியமுடிகிறது.*

### சான்றெண் விளக்கம்

1. *ச.முருகேசன், செவ்வியல் இலக்கியச்செந்நெறி, ப.78.*
2. *எஸ்.கௌமாரீஸ்வரி, திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.31.*
3. *ந.அறிவுராஜ், தமிழக வரலாறும், பண்பாடும், ப.79.*

4. ச.மெய்யப்பன், பாரதியார் கவிதைகள், ப.151.
5. வ.சிவசங்கரன், திருவாசகம் தெளிவுரை, ப.92.
6. பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை, தமிழ் இலக்கியங்களில் வாழ்கை நெறிமுறைகள், ப.92.

**துணைநூற் பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| 1. | ச.முருகேசன் | - | செவ்வியல் இலக்கியச் செந்நெறி<br>இராசகுணா பதிப்பகம்,<br>எண்.913 ஈஇ சாய்ஸ்டோன் அபார்மெண்ட்ஸ்<br>பசார் ரோடு, ராம்நகர், மடிப்பாக்கம்,<br>சென்னை – 600 091<br>பதிப்பு – 2014 |
| 2. | கௌமாரீஸ்வரி, எஸ். | - | திருக்குறள், பரிமேலழகர் உரை<br>சாரதா பதிப்பகம்,<br>ஜி-4 சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,<br>ராயப்பேட்டை. சென்னை – 600 014.<br>22ம் பதிப்பு – 2018 |
| 3. | ந.அறிவுராஜ் | - | தமிழக வரலாறும், பண்பாடும்,<br>பாவை பர்னிச்சர்,<br>141 ஜானி ஜான்சன்<br>இராயப்பேட்டை,<br>சென்னை<br>பதிப்பு – ஜுன்-2010 |
| 4. | மெய்யப்பன், ச | - | பாரதியார் கவிதைகள்<br>தென்றல் நிலையம்<br>சிதம்பரம் – 608 001<br>ஏப்ரல் 2000 |
| 5. | புலவர் சிவசங்கரன், வ. | - | திருவாசகம் தெளிவுரை<br>மணிவாசகர் பதிப்பகம்,<br>31, சங்கர் தெரு, பாரிமுனை,<br>சென்னை – 600 018<br>பிப்ரவரி - 2022 |
| 6. | பதிப்பாசிரியர்<br>முனைவர். அருட்சகோதரி<br>ஜாஸ்டீன் தங்ககுமாரி, | - | தமிழ் இலக்கியங்களில் வாழ்க்கை நெறிமுறைகள்<br>பன்னாட்டு கருத்தரங்கோவை – 2016<br>பூச்சரம், காரைக்குடி |